Deposition of Witness

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop No.408/2021

ம..சா.2 மருத்துவர்ஆர். பிரின்ஸ் ரஜினிகாந்த்

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் ஆர். பிரின்ஸ் ரஜினிகாந்த் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 27.07.2023 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி காவலர் மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது . கடந்த 5.3.2019 அன்று தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது மாலை 5.15மணிக்கு 41வயதுடைய ஆண் நபர் ஜெஸ்டின் என்பவர் அடிபட்டு அவசரசகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு மார்பகத்தில் 2 முதல் 6 வரையுள்ள எலும்புகளில் காயங்கள் இருந்தது. அவரது தோள்பட்டையிலும் காயங்கள் இருந்தது. அவரால் வலதுகையை தூக்க இயலவில்லை. அவரது வலதுமுட்டியிலும், வலது பக்க வயிற்று பகுதியிலும் காயங்கள் இருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக அவரது விருப்பத்தின் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் சுதர்சன் என்ற தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்நோயாளியாக தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது வலது வயிற்று பகுதியில் கொடூரமான காயங்கள் இருந்தது. கல்லீரலில் ரத்த காயங்கள் இருந்தது. 2 முதல் 6

எலும்புகள் உடைந்திருந்தது. அவரது பின்தோள்பட்டை வலது பக்கம் எலும்பில் முறிவு இருந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ2 தான் நான் வழங்கிய சான்று என்றால் சரிதான். ம.சா.ஆ3 மற்றும் ம.சா.ஆ10 நான் ஆய்வு செய்த மருத்தவ குறிப்புகள் என்றால் சரிதான். மேற்படி காயங்களினால் மனுதாருக்கு எதிர்காலத்தில் கடுமையான வேலை செய்ய சிரமம் இருக்கும், மார்பக எலும்பு முறிவுஉள்ளதால் பணி நேரத்தில் மூச்சு விடும் சிரமம் உள்ளது. ஒருபக்கம் சாய்ந்து படுக்க சிரமமாக இருக்கும். நுரையீரலில் ரத்தகட்டு இருப்பதால் மூச்சு திணறல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடுமையான வேலைகள் செய்யும் போதே அல்லது படிகள் ஏறும்போதும், வேகமாக நடப்பதற்கு இயலாமையாக இருக்கும். உணவு செரிமானங்கள், வயிற்று உபாதைகள், அசைவ பொருட்கள் செரிமானத்தில் கோளாறு ஏற்படும். மேற்படி நபருக்கு நோய்தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.